RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s510

OPEN ACCESS

# திராவிட இயக்க முன்னோடி அயோத்திதாசப் பண்டிதர்

கா. கிருத்திகா [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# Iyothee Thass Pandithar, the pioneer of the Dravidian movement

K. Kiruthika [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: kiruthikasi1995@gmail.com

Received: 23-07-2021
Revised: 20-04-2022
Accepted: 20-04-2022
Published: 04-07-2022

Check for updates

## ABSTRACT

It was during the colonial rule that India underwent many changes. They enslaved a particular race as untouchables and untouchables within the enslaved population. There were some advantages as well as disadvantages under colonial rule. Education available only to the barbarians was made available to the laity, reservations were made, superstitions were questioned, and literary manuscripts were frightened. Those listed under colonial rule received some concessions. Got the opportunity to work with the english. C. Iyothee Thass Pandit was notable among those who took advantage of those opportunities. Iyothee Thass is a multilingual scholar. Anyone who considers anything and discusses it with relevant sources. Who sounded like the overall voice for his race? Who sought to establish the identity and culture of his race with historical evidence? The origin of dravidian thought, the so-called father of dravidian ideology. Following him, Dravidian thinkers are still growing today. The study is said to have established Iyothee Thass as the forerunner of dravidian ideology.

**Keywords:** Dravidian, Brahmanical, Vantheris, Colonial, Iyothee Thass, Periyar

## முன்னுரை

ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் குரலாக மக்களின் தலைவர்கள் பலர் உள்ளனர். கால மாற்றத்தினால் இயக்கங்கள் புதிதாகவும், ஒரு சில மாற்றங்களுடனும் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் அவற்றின் பிரதான கொள்கைகள் எந்த மாற்றமும் இல்லாமல் தான் உள்ளது. கொள்கை முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய தலைவர்களுக்கு முன்னோடியாகப் பலர் இருந்துள்ளனர். அவர்களின் தியாகங்கள் இவ்வியக்கங்களை இன்றளவும் உயிர்ப்புடன் திகழ வைத்திருக்கிறது. காலனிய ஆட்சி காலத்தில் தொடங்கிய திராவிடப் போராட்டங்கள் இன்றும் தொடர்ந்து வருகின்றன. திராவிடர்கள், ஆதிதிராவிடர்கள் என்று இருந்த ஒரு இனத்தையும் அதன் பண்பாட்டையும் அடையாளத்தையும் மீட்டுக்கொணரும் இயக்கமாக உருவெடுத்த இயக்கம் திராவிட இயக்கம். அருட்திரு ரெவரண்ட் ஜான் ரத்தினம் பத்திரிகையில் தொடங்கிய 'திராவிடம்' என்ற சொல் இன்று பல செய்தித்தாள்களின் பெயராகவும் கொள்கைகளாகவும் இருந்து வருகிறது. இக்கழகங்களுக்கு முன்னோடியாகவும், திராவிடக் கொள்கைகளுக்கு வடிவம் கொடுத்தவராகவும் இருப்பவர்களில் க.அயோத்திதாசப் பண்டிதர் முக்கியமானவர் (Angayarkanni & Kiruthiga, 2021). அவரைத் தொடர்ந்து தான் திராவிட இயக்கத் தலைவர்கள் வளர்ந்து வருகின்றனர். காலனிய ஆட்சியில் திராவிடத்தை மக்கள் மத்தியில் அதிகமாகப் புழங்கச் செய்து வந்தேறிகளை நிலைகுலையச் செய்தவர் (Alocious, 2019). அவர் உருவாக்கிய 'திராவிட மகாஜன சபை" தற்போது 'திராவிட' முன்னேற்ற கழகமாகத் தொடர்ந்து

வருவதையும், இவ்வியக்கத்திற்கு முன்னோடியாக இருந்தவர் க.அயோத்ததிதாசப் பண்டிதர் என்பதையும் நிறுவுதாக இக்கட்டுரை அமைகிறது.

## திராவிடம் - இனம்

'திராவிடம்' என்பது ஒரு சொல் மட்டும் அல்ல. ஒரு இனத்தின் பண்பாட்டு அடையாளம். லெமூரியா கண்டத்தில் பரவலாகக் காணப்பட்ட ஒரு இனக்குழு. இச்சொல் இன்றுவரை உலகநாடுகளைப் பல ஆய்வுக்குத் தூண்டிய வண்ணமே உள்ளது. வரலாற்று ஆசிரியர்களுக்கு இவ்வினத்தின் தொடர்பானத் தேடல் பல வியப்புட்டும் தகவல்களைத் தந்து கொண்டுள்ளது. 'திராவிடம்' என்ற சொல் தமிழில் இருந்தே உருவாகியுள்ளது. 'தமிழ்' என்ற சொல் 'அம்' விகுதி பெற்று "தமிழம்"என்றானது அதிலிருந்து தான் திரமிளம், திரமிடம், தீரவிடம், திராவிடம் என்று தற்போது சொல்லப்பட்டு வருகிறது. இவ்வினம் கால மாற்றத்தினாலும், பல படையெடுப்பாலும் பல இன்னல்களுக்கு உட்பட்டு உலக நாடுகளில் சிதறி வாழ்ந்து வருகின்றனர். உடல் வலுவும், தேர்ந்த அறிவாற்றலும் கொண்ட மக்கள் வாழ்ந்த இனத்தின் தேடல் இன்றும் தொடர்ந்து கொண்டு தான் உள்ளது. இவ்வினத்தின் எச்சங்களையும், வரலாற்றுத் தடயங்களையும் கொண்டு இப்படிப்பட்ட இனம் வாழ்ந்ததை நிறுவுவதற்கும் பல அறிஞர்கள் முயன்றுவருகின்றனர். பல படையெடுப்பால் மக்களின் வரலாறு அழிக்கப்பட்டுள்ளது. அதனால் மக்கள் தன் நாட்டிலேயே சுயம் மறுக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டனர். திராவிடம் என்பது தமிழ், கன்னடம், குடகு, துளு போன்ற தென்னிய மொழிகளின் கூட்டிணைவு. பெரியார் குடியரசில் "தென்னிந்திய இனத்தைச் சேர்ந்த ஒரே இனத்தவர் திராவிடரே. ஆகவே இச்சொல் தென்னிந்திய மக்கள் அனைவரையும் குறிப்பதாக உள்ளது" என்றார். (07.02.1929 - பக்.4) 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியா காலனிய ஆட்சியில் இருந்தது. அப்போது நாட்டில் சில நன்மைகள் விளைந்தன. அவற்றின் குறிப்பிடத்தக்கவை 'அச்சுக்கூடம்' பல வரலாற்று ஆவணங்கள் அச்சேற்றப்பட்டன. 'திராவிடம்' பற்றிய கருத்தியல் ஆங்கிலேயருக்கு புரிய வைக்க முயற்சிகள் பல, திராவிட அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலேயர்களும் திராவிட மொழியைக் கற்று அதன் பெருமையை உலகறிய பல நூல்கள் அவர்கள் மொழியில் எழுதினர். அவ்வாறு எழுதப்பட்ட நூல்களில் மிக முக்கியமான ஒன்று 'இராபர்ட் கால்டுவெல் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூல். இந்நூலின் மூலம் திராவிடர் தான் புர்வ குடிகள், அம்மொழி தான் மூத்த மொழி என்பதை உலக அறிஞர்கள் ஆய்வு செய்து அதை நிறுவ முயன்றுவருகின்றனர். இவ்வினத்தை இன்றுவரை அடிமைகளாக நடத்தி வரும் வந்தேறிகளாக வந்த பார்ப்பனக் கூட்டம். அவர்களின் அடிப்படை உரிமைகளைக் கூட எந்த வகையிலும் நிறைவேறக்கூடாது என்று பல சூழ்ச்சிகளைச் செய்து வருகின்றனர். 19ஆம் நூற்றாண்டில் வந்தேரிகளுக்கு எதிராக திராவிடக் குடிகளுக்கான குரல்கொடுத்தவர் க.அயோத்திதாசப் பண்டிதர். இவர் இவ்வினம் தான் புர்வகுடிகள், இவர்கள் தான் ஆதி திராவிடர்கள் இந்நிலத்திற்கு உரிமைப்பட்டவர்கள் என்று ஆய்வு செய்து அதை நிலைநாட்ட பல போராட்டங்களைச் செய்தவர்.

## திராவிட இயக்க அரசியலின் முன்னோடி க.அயோத்திதாசப் பண்டிதர்

காலனிய ஏகாதிபத்திய ஆட்சியில், 1845 ஆம் ஆண்டு கந்தசாமிக்கு மகனாகப் பிறந்தார். இயற்பெயர் காத்தவராயன். சென்னை, தேனாம்பேட்டையில் வளர்ந்தார். தாத்தா கந்தப்பன் ஆங்கிலேயே ஆட்சியில் பட்லராகப் பணிபுரிந்து வந்தார். இவர் திருக்குறள், நாலடியார் எழுதியிருந்த ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பாக வைத்திருந்து அச்சிட வழங்கியவர். காத்தவராயராக பள்ளிக் கல்வியைத் தொடங்கி தமிழ் இலக்கணம் கற்றுத் தந்த அயோத்திதாசப் பண்டிதர் என்ற ஆசிரியரின் பெயரை தன் பெயராக மாற்றிக் கொண்டு தன் கல்வியைச் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்தார். சித்த வைத்தியத்திலும் சிறப்பாகச் செயல்பட்டார்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளைக் கற்றறிந்தார் அத்வைதத்தில் நாட்டம் கொண்டிருந்தவர் பின் அங்கிருந்து வெளியில் வந்தார். பௌத்தம் சார்ந்து அவரது தேடல் தொடர்ந்தது. புத்தரின் தத்துவங்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டார். சென்னையிலிருந்து

நீலகிரிக்கு தந்தை கந்தசாமிக்குப் பணிமாறுதல் பெற்று குடும்பத்துடன் சென்றார்கள். நீலகிரியில் இருந்தபோது திராவிடசிந்தனை அவரை எழுச்சி பெறச் செய்தது. தோடர் இனப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அம்மக்களுக்காக உரிமைக்குரல்கள் எழுப்பினார். க.அயோத்திதாசப் பண்டிதர் காலனிய ஆட்சியை ஏற்றுக்கொண்டிருந்தார். அவரைப்போலவே ஒருசிலத் திராவிடச் சிந்தனையாளர்கள் காலனிய ஆட்சியை ஏற்றிருந்தனர். தேசம் முழுவதும் சுய ராஜ்ஜியத்திற்காகப் போராடிக் கொண்டிருந்தபோது இவர்கள் திராவிடர்களுக்காகப் போராடினார். ஜாதி, மதம் என்ற அடிப்படையில் இங்கு குறிப்பிட்ட இனக் குழுவை மட்டும் ஒடுக்கப்பட்டவர்களாகவும், உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும், தீண்டப்படாதவர்களாகவும் நடத்தப்பட்டு வரும்போது சுயராஜ்ஜியம் வேண்டும் என்று மற்ற இயக்கங்கள் ஆங்கிலேய ஆட்சியரை எதிர்ப்பது என்பது மூடத்தனமானது என்று க.அயோத்திதாசப் பண்டிதர் கூறினார்.

க.அயோத்திதாசப் பண்டிதர் சென்னையில் நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் பார்ப்பனர்கள், பார்ப்பனர்கள் அல்லாதவர்கள் ஜில்லா வாரியாக நடைபெற்ற கூட்டத்தில் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கான குரலாக ஒலித்தார். இக்கூட்டம் அவரது மனதில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது மனிதம் அற்ற மக்கள் கூட்டத்தை அவர் அருவருப்புடன் பார்க்கத் தொடங்கினார். அக்கூட்டத்தில், இலவசக் கல்வி ஒடுக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் அடிப்படைக் கல்வி 4ஆம் வகுப்பு வரை படிக்க பாடசாலைகள் அமைத்து தருமாறு கூறினார்.

தரிசு நிலங்களை நிலம் இல்லாத ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்க வேண்டும். என்ற அடிப்படைக் கோரிக்கைகளைக் கூட பார்ப்பனர்கள் மக்களுக்கு கிடைக்கவிடாமல் செய்கின்றனர். பெருந்தெய்வங்கள் எல்லாம் அவர்களுக்கானது, தன் இனம் தான் பெருமை மிக்கது என்று தற்புகழாரம் சூடிக் கொண்டிருந்த பார்ப்பனர்களை அற்ப உயிரினமாகக் கருதினார். இக்கூட்டம் தான் அயோத்திதாசப் பண்டிதரை திராவிடச் சிந்தனையில் முழுமுனைப்புடன் செயல்பட வைத்தது.

## திராவிடக் கருத்தியல் - அயோத்திதாசப் பண்டிதர்

அயோத்திதாசப் பண்டிதரின் மிக முக்கியவாதம்

1. 'பழங்குடியின மக்களும் தாழ்த்தப்பட்டவர்களுமான ஆதித்தமிழர்களே இந்நாட்டின் முதல் குடிமக்கள், அதாவது பூர்வ குடிகள் (அ) மண்ணின் மைந்தர்கள்.
2. இம்மண்ணின் மைந்தர்களான அவர்கள் இந்துக்கள் அல்லர்" (Dharmaraj, 2019)

உள்நாட்டிற்குள்ளே அடிமைப்பட்டு இருக்கும் மக்களை மீட்டெக்கும் இயக்கமாக திராவிட மகாஜன சபையைக் கருதினார்.

மதம், சாதியக் காழ்ப்புணர்வோடு இம்மண்ணிற்கு உரிமையான மக்களை வந்தேறிகள் இழிவுபடுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாமல் அயோத்திதாசர் திராவிடத்தை முன்மொழிந்தார். தொடக்கத்தில் அத்வைதத்தில் நாட்டம் கொண்டவர். பின் அக்கோட்பாடுகளால் அதிருப்தி அடைந்தார். அதைவிட்டு வெளியே வந்தவரின் தேடலுக்குப் பயனாக பௌத்தக் கோட்பாடுகள் இருந்தன. திராவிடர்கள் பௌத்தம் மூலம்தான் முழுவிடுதலை அடைய முடியும் என அயோத்திதாசர் தீர்க்கமாக நம்பினார்.

பௌத்தம்மூலம் முன்வைத்தார் பார்ப்பனர்களால் தீண்டப்படாதவர்களாக நடத்தப்பட்ட மக்களுக்குச் சற்று மூச்சுவிட சிறிது நேரம் கிடைத்தது போல காலனிய ஆட்சி அமைந்தது. பார்ப்பனர்களால் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு மெக்காலே பிரபு கொண்டு வந்த கல்விக் கொள்கை சட்டம் கல்வியைக் கொடுத்தது. தெருவில் நடக்க உரிமையிழந்தவர்களுக்கு காலனிய ஆட்சியில் அவர்கள் அடுப்பங்கரை வரை உள்ளே செல்ல வேலை கொடுத்தது. காலனிய ஆட்சியின் வருகையால் சில முன்னேற்றங்கள் நாம் அடைந்ததை வரவேற்றாலும், அவர் கிறித்துவத்தை வரவேற்கவுமில்லை ஆதரிக்கவுமில்லை. காலனிய ஆட்சியாளருக்கு சாதி பற்றிய பெரிய புரிதல்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை.

வரலாற்றாசிரியர் தொ.பரமசிவம் "திடீரென்று ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் சாதிப்படிநிலையில் மாற்றம் வரமுடியாது. இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலேயர்கள் தான் சாதியை ஒடுக்குவதற்கு 1856 Caste Disabilities Removal act சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்" என்று கூறுகிறார். (கீற்று இணையதளக்கட்டுரை, நேர்காணல், 24 மே 2012) காலனிய ஆட்சியில் தான் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அப்போது பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட மக்களை இந்துக்களாக பதிவுசெய்யும்படி பிராமணிய ஏகாதிபத்தியம் கூறியது. அயோத்திதாசர் அவர்கள் திராவிடர்கள், ஆதிதிராவிடர்கள் என்று குறிப்பிடும்படி கூறினார்.

அயோத்திதாசப் பண்டிதர் திராவிடக் கருத்தியலைக் காழ்ப்புணர்வோடு புறக்கணித்தவர்களுக்குப் பதில் கொடுக்கும் வகையில் அவர்தன் நினைவில் புதைந்திருந்த செய்திகளையும், பன்முகப்பட்டத் தகவல்களையும் கொண்டு மாற்றுப் பார்வையில் பௌத்தத்துடன் தொடர்புபடுத்தி திராவிடர்கள் தான் 'பூர்வக்குடிகள்' என்று நிறுவ முயன்றார்.

'அயோத்திதாசப் பண்டிதர் தனக்கு கிடைத்த தரவுகளை இரண்டு வகையில் பிரித்துக் கொண்டு திராவிடக் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

1. நடப்பு கால நிகழ்வு
2. கடந்தகால நிகழ்வு (Dharmaraj, 2019)

## நடப்பு கால நிகழ்வு

பார்ப்பனர்கள் அவர்கள் வாழும் சேரிகளுக்குள் பார்ப்பனரல்லாதவர்களான தீண்டப்படாதவர்கள் நுழைந்தாலோ, அவர்களை எதிரில் கண்டாலோ, தொட்டாலோ அது இழிவான செயல் என்றும் தீட்டாயிட்டு என்று தோஷம் கழிக்கும் வழக்கத்தைச் சாடியும், அப்பழக்கம் திராவிடர்களிடமும் இருந்தது என்பதை அயோத்திதாசர் தனக்கு கிடைத்த தகவலின் மூலம் பதிவு செய்துள்ளார்.

'பஞ்சமர் என்று உயர்சாதியினரால் வகுக்கப்பட்ட'ஆதித்திராவிடர்கள்" வாழக்கூடிய கிராமங்களில் பிராமணச் சாதியினர் நுழைந்தால் இவ்விடம் தீட்டுப்பட்டு விட்டது என்று கூறிக் கூச்சலிட்டு, நுழைந்தவரை விரட்டி அனுப்பி அவர்களின் கால்பட்ட இடத்தில் தீட்டு கழிக்கும் சடங்கினையும் ஆதிதிராவிடர்கள் செய்துள்ளனர். சாணி இட்டு மெழுகி, பின் மண்பானை நிறைய சாணியைக் கரைத்து ஊருக்கு வெளியே கொண்டு போய் ஈமச்சடங்கில் உடைப்பது போல் உடைத்துவிட்டு வருவார்கள்' என்று டி.தருமராஜ் குறிப்பிட்டுள்ளார் (Dharmaraj, 2019). சாதித்துவேஷம் என்பது இவ்விரு சாதியினருக்கும் ஏற்பட்ட பழைய விரோதத்தின் காரணமாகவே இருந்திருக்கிறது.

சாதித்துவேஷம் வந்தேறிகளால் உருவாக்கப்பட்ட ஒன்று. அவர்களின் முக்கியமான நோக்கம் திராவிடர்களின் ஒற்றுமையை உருக்குலைக்கச் செய்வது சாதியை உட்புகுத்தி ஒவ்வொருவருக்குள்ளும் பகையை உண்டாக்கினர். சாதிகளுக்கு இடையில் புசல்கள் ஏற்படுத்தி விட்டு அது இன்றளவும் தொடர்ந்து வருகிறது. பெரியார் தான் எழுதிய சுயவிமர்சனத்தோடு எழுதிய கட்டுரையில் தன் இளமைக் காலத்தில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் குறிப்பிட்டுள்ளார். இளமைக் கல்வி கற்கும் காலத்தில் ஒவ்வொரு சாதியினருக்குள்ளும் தான் நண்பர், உறவுமுறைகள் வைத்துக் கொண்டிருந்தனர். பெரியார், ஒருமுறை பாடசாலையில் தண்ணீர் தாகமெடுத்தபோது ஆசிரியர் வீட்டில் வாங்கி அருந்தியுள்ளார். அவர் குடித்தக் குவளையை நன்றாகக் கழுவி உள்ளே எடுத்துச் சென்றனர். பெரியாரின் தாயார் ஆசிரியர் வீட்டில் மட்டுமே தண்ணீர் குடிக்க வேண்டும். பிற சாதியினர் வீட்டில் தண்ணீர் குடிக்கக் கூடாது என்று கூறி அனுப்புவார்களாம். பெரியார் அப்போதே யார் பேச்சையும் கேட்டதில்லை. தன்னுடன் பயிலும் செட்டியார் சாதி நண்பனின் வீட்டிற்கு வெளியே நின்று தண்ணீர் குடிப்பார். அவர்கள் பெரியார் குடித்தக் குவளையை கழுவிவிட்டு அவர் நின்ற இடத்தில் தண்ணீர் ஊற்றி விடுவார்கள். பெரியாருக்கு இச்செயல்கள் சற்று சிந்தனையை தூண்டிவிட்டுள்ளது. சாதிய வேறுபாடு தொடங்கிய போது அவரவர் சாதிகளுக்குள் தனித்தனியேக் கட்டுபாடுகள் விதித்துக் கொண்டனர். பிற சாதியினருடன் பழகினாலோ, புலங்கினாலோ சாதியை விட்டு விலக்கி வைக்கும்

பழக்கமும் இருந்துள்ளது. அறிவியல் முன்னேற்றம், கல்வி அறிவுபெற்றிருந்தாலும் இன்றும் இக்கட்டுப்பாடுகள் நடந்தேறிக் கொண்டுள்ளன.

## வரலாற்று நிகழ்வு

சாதிய வேறுபாடு எப்பொழுது இருந்து தொடங்கியது என்பது பற்றியும், அது தொடர்பான ஒரு பெருந்தேடலைத் தொடங்கினார் அயோத்திதாசர்.

அவர் தொடங்கிய பெருந்தேடலின் பரிசாக 1890 ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் ஒரு சில ஓலைச் சுவடிகள் அவருக்கு கிடைத்துள்ளன. அச்சுவடியில் 570 செய்யுள்கள் இருந்தன. அச்சுவடியின் தலைப்பு 'நாரதீய புராண சங்கைத் தெளிவு' இது ஒரு உரைச் சுவடி. அஷ்வகோசர் என்ற முனிவர் எழுதியப் பாடலுக்கான உரை.

வடபகுதியில் புருசீகர்கள் என்ற இனக்குழு வாழ்ந்துவந்தனர். அவர்களில் இரு பிரிவினர் ஒருவர் அக்னி வழிபாடு செய்பவர்கள், மற்றொருவர் வங்க தேசத்தினர். இவர்கள் இருவருக்குள்ளும் சண்டை ஏற்பட்டு அக்னியை வழிபடுபவர்கள் உயிர்பிழைத்து 'சிந்தூரல்' (சிந்துசமவெளி) நதிக்கரையில் தஞ்சம் அடைந்தனர். நதிக்கரையில் 'திராவிடர்கள்' இனக்குழுக்களாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் நல்லறிவு கொண்டு ஞானிகளாகவும், அறிஞர்களாகவும், முனிவர்களாகவும் ஒற்றுமையுடன், சமத்துவத்துடன் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். திராவிடர்களுக்குள் திருமண ஒப்பந்தங்கள் இருந்துள்ளன. முனிவர்கள், அறிஞர்கள் ஆகியோர் இறந்தபொழுது கட்டப்பட்ட சமாதிகள் மடங்களாக பின்னாளில் மாற்றப்பட்டன (Dharmaraj, 2019).

திராவிடர்களிடம் தஞ்சம் புகுந்தவர்கள் அவர்களின் பழக்கவழக்கங்கள் நன்கறிந்து கொண்டு அவர்களைப் போல எல்லாம் செய்யத் தொடங்கினர். கற்றறிந்தவர்கள் மட்டுமே முப்புரிநூல் அணிந்திருந்தனர். வந்தேறிகள் அவர்களைப் போலவே முப்புரிநூல் அணிந்து கொண்டு கல்வியறிவு இல்லாத மக்களை ஏமாற்றி வந்துள்ளனர்.

திராவிடம் என்றாலே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளின் கலப்புதான். ஒரு சில இடங்களில் வந்தேறிகள் தங்களை பிராமணர்கள் என்று கூறி மக்களை அடிமைப்படுத்தத் தொடங்கினர். அதை அறிந்த திராவிட அறிஞர்கள் அவர்களை ஊரைவிட்டு அடித்து விரட்டினார்கள். அதனால் வந்தேறிகள் எங்காவது திராவிட சந்நியாசி அறிஞர்கள், முனிவர்களைப் பார்த்தால் யாரிடமாவது தங்களைப் பற்றி பறையப்போகிறார்கள் என்று பயந்து ஓடிவிடுவார்கள். அவர்களைப் பார்த்தாலே 'பறையப் போகிறார்கள்' 'பறையப் போகிறார்கள்' என்று கூறி ஓடிவிடுவார்கள். அதுவே பின்பு 'பறையர்' என்று திராவிடர்களை மற்றவர்கள் அடையாளப்படுத்திவிட்டனர். இவ்வாறு அயோத்திதாசர் திராவிடர்கள் தான் பூர்வகுடிகள் என்பதை அழுத்தமாகக் கூறுகிறார்.

## திராவிடப் பணி

க.அயோத்திதாசப் பண்டிதர் அத்வைதானந்த சபை மூலம் திராவிடர்களை ஒருங்கிணைத்து பல சமூக மாறுதல்களைச் செய்தார். இவருக்கு பல அறிஞர்கள் தொடர்பு இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி இவருக்கு அறிவார்ந்த தேடல் களத்தைத் தந்தது. ஆங்கிலேய ஆட்சியில் பட்டியலினத்தவர்கள் பணிகளில் அமர்த்தப்பட்டனர். அயோத்திதாசர் நீலகிரிக்கும், சென்னைக்கும் சென்றுவருவதென்பது அவ்வளவு எளிதானதாக அப்போது இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆங்கிலேயர் ஆட்சியில் இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டன. இவர்கள் ஆட்சி ஒரு சமூக அரசியல் மாற்றத்திற்கு ஏதுவாக அமைந்ததாக அயோத்திதாசர் கருதினார். இதை பின்னாளில் தோன்றிய திராவிட பெரியார் போன்றோரும் ஏற்றனர். அருட்திரு ஜான் ரத்தினம் அவர்களுடனான நட்பு அயோத்திதாசரை மேலும் வலுப்படுத்தியது. 1882இல் 'திராவிடப் பாண்டியன்' எனும் இதழை துவங்கி அதன் ஆசிரியராக ஜான் ரத்தினம் இருந்தார். அவருடன் சேர்ந்து சில காலங்கள் அயோத்திதாசர் பயணித்தார்.

1890 ஆம் ஆண்டு அயோத்திதாசரால் 'திராவிட மகாஜன சபை' துவங்கப்பட்டு முதல் மாநாடு நீலகிரியில் 01.12.1891 நடைபெற்று சில கோரிக்கைகள் பற்றி தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்தியாவில் நடத்திய தாழ்த்தப்பட்டோருக்கான முதல் மாநாடு இதுதான். தலைமை க.அயோத்திதாசப் பண்டிதர்.

1. பறையர் எனக் கூறுவது அவதூறு எனக் கருதிக் குற்றம் எனக் கருதச் சட்டம்.
2. கல்வி வசதியினை அளித்தல்
3. கல்வி உதவித்தொகை அளித்தல்
4. கல்வியல் தேறியவருக்கு அரசு வேலை
5. கல்வி கற்றவர்களுக்குத் தடையின்றிப் பணி நியமனம்.
6. உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்.
7. சிறைச்சாலைச் சட்டம் 464 பிரிவை நீக்குதல்
8. பொது இடங்களில் நுழைய உரிமை
9. அரசு அலுவலகங்களில் இக்குலத்தோரைத் தங்கு தடையின்றி அனுமதித்து நீதி அளித்தல்.
10. கிராம முன்சீப் அலுவலகங்களில் இக்குலத்தோர் நியமிக்கப்பட்டு அரசு நிர்வாகத்துடன் நேரடித் தொடர்பு"

இக்கோரிக்கைகள் அடங்கிய பொது மனு ஒன்றை 21.12.1891 அன்று காங்கிரஸ் செயலர் எம்.வீரராகவாச்சாரியார் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை" (Gowthama Sanna, 2018).

கோரிக்கைகள் மறுத்தளிக்கப்படுவதால் அயோத்திதாசர் தன் கருத்துக்களை பொதுமக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்று 1907 ஆம் ஆண்டு சென்னை ராயப்பேட்டையில் 'ஒரு பைசாத் தமிழன்' என்ற வார இதழைத் தொடங்கினார். திராவிடம் சார்ந்து அவர் இயங்குவதற்கு இப்பத்திரிகை பெரிதும் உதவியது. 1908 இல் இப்பத்திரிக்கையின் பெயர் மாற்றப்பட்டு 'தமிழன்' என்று வெளிவந்தது. 1914 ஆம் ஆண்டு வரை வெளிவந்து கொண்டிருந்த பத்திரிக்கை சிறுசிறு இடைவெளிக்குப் பின் 1933 ஆம் ஆண்டு முற்றிலுமாக நின்று விட்டது. சாதியை எதிர்த்தவர், பௌத்தக் கோட்பாட்டை ஆதரித்தார். அதன் காரணமாக தலையங்கத்தின் மேலே தாமரை சின்னம் வைத்தார். இப்பத்திரிக்கையின் வழியாக அயோத்திதாசர் நவீன அரசியல், ஆய்வுக்கட்டுரை, பகுத்தறிவு, சாதி ஒழிப்பு, பிராமணிய ஆதிக்க எதிர்ப்பு, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், முற்போக்கு, பவுத்தம் போன்ற கருத்துக்களைக் வாசகர்களுக்குப் பதிவு செய்தார். முக்கியமாக இலக்கியம், அறிவியல், மருத்துவம், விவசாயம், வானியல் அறிக்கை, வாசகர் கேள்வி பதில் இடம் பெற்றன. திராவிடப் பாண்டியனில் பணிபுரிந்த அனுபவம் 'தமிழன்' இதழ் தொடங்க இவருக்குப் பெரிதும் உதவியது.

'தமிழன்' இதழில் வந்த வாசகர் கேள்வி பதில் பகுதி தான் அயோத்திதாசரின் திராவிடக் கருத்தியலை நாடறியச் செய்தது. அத்தகவல்களின் தொகுதியே வரலாற்றை நமக்கு வேறு கோணத்திலும் பார்க்கத் தூண்டியுள்ளது. க.அயோத்திதாசப் பண்டிதர் வகுத்த கொள்கைகளைத் திராவிட இயக்கக் கொள்கைகளாக சிறு மாற்றத்துடன் இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

சாதி எதிர்ப்பு, வேஷ பிராமண எதிர்ப்பு, கல்வி, இட ஒதுக்கீடு, பெண் உரிமை (தொழில் செய்வதற்கானக் கல்வி, கைம்பெண் மறுமணம், புராணக் குப்பைகளை ஒழித்தல், பல்துறை அறிவு பெறுதல், கணவனுக்கு அடிமைப்பட்டு இருப்பதை எதிர்த்தல்), இந்து மத எதிர்ப்பு, பௌத்த நெறி (மத மாற்றம்), வரலாற்றை மாற்றுப் பார்வையில் பார்த்தார் தாசர், கடவுள், பேய் போன்ற கருத்தை மறுக்கிறார். தீபாவளிப் பண்டிகையை இரண்டு விதமாகப் பார்க்கிறார். ஆலயமும் கோயிலும் பற்றிய தாசர் புரிதல், ஏற்பது இகழ்ச்சி (பௌத்த நெறி), லஞ்சத்தை ஒழித்தல், இதுபோன்ற வேறு தளங்களில் அயோத்திதாசரின் ஆய்வுகள் அமைந்துள்ளன.

## நீதிக்கட்சி

அயோத்திதாசர் தோற்றுவித்த 'திராவிட மகாஜனசபை' தான் முதன் முதலில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தொடங்கப்பட்ட சபை. அயோத்திதாசர் மறைவிற்கு பிறகு சென்னையில் 1912 இல்

தொடங்கிய சங்கத்தை 1916 இல் 'தென்னிந்திய நல உரிமைக்கழகம்' என பெயர் மாற்றி திராவிடர் நலனுக்காகத் தொடங்கப்பட்டது. இச்சங்கத்தின் ஒரு பிரிவு தான் 'நீதிக்கட்சி' என்ற பெயருடன் இயங்கியது. இந்திய அரசியல் சீர்திருத்தத்தினால் கொண்டுவரப்பட்ட இரட்டை ஆட்சி முறையை இந்திய தேசிய காங்கிரஸ் எதிர்த்தது. நீதிக்கட்சி ஆதரித்தது. 1920, 1923 தேர்தல்களில் வெற்றி பெற்ற நீதிக்கட்சி திராவிடரின் நலன், பொதுத்துறைகளில் இனவாரிப்பணி ஒதுக்கீடு, கல்வி விரிவாக்கம் போன்ற பல திட்டங்களின் அடிப்படையில் செயல்பட்டது. 1926 இல் உட்கட்சி பூசலால் தோல்வியைத் தழுவியது. 1927 இல் மாநிலத் தன்னாட்சிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மீண்டும் ஆட்சியைப் பிடித்தாலும் அதன்மதிப்புக் குறையத் தொடங்கியது. 1937க்குப் பின் பெரியார் தலைமைப்பதவி ஏற்றார். தொடக்கத்தில் இந்திய தேசிய காங்கிரசில் ஈடுபாடு காட்டிய பெரியார் காங்கிரசின் மெத்தனப் போக்கை எதிர்த்து வெளியேறினார்.

## சுயமரியாதை இயக்கம்

தன்மான இயக்கத்தைத் தொடங்கி மக்கள் மத்தியில் நிலவும் சமூக சீர்கேடுகள், அறியாமை, மூடநம்பிக்கை என்பனவற்றை எதிர்த்துப் போராடினார். 1935 ஆம் ஆண்டு இராஜாஜி தலைமையில் அமைந்த காங்கிரஸ் அரசின் இந்தித் திணிப்புக் கொள்கையை எதிர்த்துப் போராடி பெரியார் சிறை சென்றார். காங்கிரசின் மொழிக் கொள்கை காரணமாக திராவிடநாடு கோரினர். 1944இல் இக்கொள்கை கழகமாக மாறியது. 'திராவிடர் கழகம்' எனப் பெயர் மாற்றப்பெற்று செயல்பட்டது.

## திராவிடர் கழகம்

திராவிடர் கழகத்தின் முக்கிய அம்சம் முழுத் தன்னாட்சி கொண்ட திராவிட நாடு, மத்தியில் கூட்டாட்சி அமைக்க வேண்டும் என்று துடிப்புள்ள இளைஞர்களுடன் பெரியார் தலைமையில் திராவிடர் கழகம் திராவிடர் நலனுக்காகப் போராடியது. சில காரணங்களால் சி.அன்.அண்ணாதுரை தலைமை கொண்ட இளைஞர்குழு 'திராவிட முன்னேற்ற கழகம்' தொடங்கியது. 1967இல் ஆட்சியைப் பிடித்தது. திராவிட கோரிக்கைகள் 'அண்ணா' ஆட்சியில் நிறைவேற்றப்பட்டன.

## அயோத்திதாசர் - பெரியார்

1. ஆரம்ப நிலைக் கல்வி, 2. நில உரிமை, 3. வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு உரிமை, 4. சுயமரியாதைத் திருமணங்கள் (கலப்புமணம், விதவை மறுமணம்), 5. சமத்துவ உரிமை, 6. மூட நம்பிக்கைகள் கலைதல், 7. பிராமண எதிர்ப்பு, 8. பெண் நலன் உரிமை.

மேற்கூறிய கருத்துக்களில் அயோத்திதாசரின் வழித்தோன்றலாக பெரியார் உள்ளார் என்பது புலனாகிறது. பெரியார் மதம், சாதி இரண்டும் மனிதனைச் சாக்கடையாக்கும் என்கிறார். அயோத்திதாசர் சாதியை எதிர்த்தவர். ஆனால் பௌத்தம் என்பதை மதமாகப் பார்க்கிறார். அதுதான் திராவிடர்களை தன்மானத்துடன் செயல்படவைக்கும் என்றிருந்தார். புத்த நெறிப் பற்றியப் புரிதல்கள் இவருக்கும் வேறுவிதமாக இருந்தது. பெரியார் மதத்தை எதிர்த்தாலும் பௌத்தம் என்பதைக் கோட்பாடாகப் பார்க்கிறார். புத்த மாநாட்டில் தலைமையுரை வகித்தார். 'புத்தநெறி' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். பௌத்தம் மூடநம்பிக்கைகளுக்கு எதிரானது என்பதில் பெரியார் தெளிவாக இருந்தார். பிராமணிய ஆதிக்கத்தால் வந்த பெருந்தெய்வ வழிபாட்டையும், அவை சார்ந்த மூடநம்பிக்கைகளையும் அயோத்திதாசர், பெரியார் இருவருமே எதிர்த்தனர். அயோத்திதாசப் பண்டிதரின் பார்வை திராவிடப் பௌத்தமாக இருக்கிறது. பெரியார் திராவிடமாக மட்டுமே பார்க்கிறார். மதம் என்பதில் மட்டுமே இருவருக்குமான பாதை வேறுபடுகிறது. அயோத்திதாசரைத் தொடர்ந்தே பெரியார் திராவிடக் கருத்தியலை முன்மொழிந்தார் என்பது புலனாகிறது.

## முடிவுரை

காலனிய ஆட்சியில் தீவிரமாகத் தொடங்கியத் திராவிடப் பயணம் தற்போது வரை ஒரு சில மாற்றங்களுடன் தொடர்ந்து வருகிறது. தீண்டப்படாதவர்களாக சித்தரிக்கப்பட்ட மக்களை மீட்டெழச் செய்து அவர்களின் உரிமைகளை அவர்கள் அறிய செய்து பின், உலகறிய செய்யப் பலர் போராடி வருகின்றனர். வரலாற்றை மீட்டெடுக்கும் முயற்சிகள் பல நடந்து கொண்டு வருகின்றன. இவர்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவர் க.அயோத்திதாசப் பண்டிதர் என்பது வரலாற்று ஆவணங்களுடன் நிறுவ பல ஆய்வுகள் நடந்து வருகின்றன.ஆதி திராவிடர்கள் தான் இம்மண்ணின் மைந்தர்கள் என்பது தாசர் தந்துள்ள ஆவணங்கள் மூலமும்,அவரைத் தொடர்ந்து வருகிற ஆய்வுகள் மூலமும் நாம் அறிந்து கொள்ளலாம். திராவிடக் கருத்தியலை மிக அழுத்தமாக பத்திரிக்கையில் மக்கள் அறியச் செய்த பெருமைக்குரியவர் க.அயோத்திதாசப் பண்டிதர். இவர் ஆற்றிய அரும்பணியைக் கௌரவிக்கும் வகையில் தமிழக முதல்வர் திரு மு.க.ஸ்டாலின், க.அயோத்திதாசப் பண்டிதருக்கு மணிமண்டபம் கட்டப்படுவதாக சட்டமன்றத்தில் அறிவித்தார்.

## References


Alocious, G., (2019) Iyothee Thassar Sinthanaigal, Folklore Resources and Research Centre, St. Xavier's College, Tirunelveli, India.

Angayarkanni, C., Kiruthiga, K., (2021) Caste and dynamics of Iyothee Thass, International Research Journal of Tamil, 3(S-1), 290-295. https://doi.org/10.34256/irjt21s147

Dharmaraj, T., (2019) Iyothee Thassar: Paarpanar mudhal Parayar varai, Kizhakku Pathippagam, Chennai, India.

Gowthama Sanna, (2018) Iyothee Thassar pandithar K., Sahitya Akademi, Chennai, India.

Paramasivan, T., (2012) Keetru inaiyathalam, Thiravida Karuthiyal, Chennai, India.

Raj Gowthaman, K., (2004) Iyothee Thassar aaivugal, Kalachuvadu Pathippagam, Nagercoil, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License